# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE

REACHING NATIONS

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: SIS. SERENA BEVIN

Vol. XXVIII | MAY 2023 | No. 05


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

### சங்கீதம் 32:1-8

1. எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்.
2. எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான்.
3. நான் அடக்கி வைத்தமட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்து போயிற்று.
4. இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகால வறட்சிபோல வறண்டு போயிற்று. (சேலா)
5. நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர். (சேலா)
6. இதற்காகச் சகாயங்கிடைக்குங் காலத்தில் பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ் செய்வான்; அப்பொழுது மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது.
7. நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்; என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக் காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர். (சேலா)
8. நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.

# அதிகாலை வேளையில் !

*சகோதரி ஏஞ்சலின் செல்வகுமாரி*



நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை மூலமாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. இதுவரை நம்மை நடத்தின தேவனது உண்மை மிகப் பெரியது. இனிமேலும் அவர் நம்மைத் தொடர்ந்து நடத்துவார்!

**தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்.** சங்கீதம் 46:5.

இது ஒரு அருமையான வாக்குத்தத்தம். எந்தச் சூழ்நிலையில் இவ்வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது என்பதைக் கவனிப்பது அவசியம். சங்கீதம் 46:2,3ஐ கவனிக்கலாம்:

1. பூமி நிலை மாறினது
2. மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனது
3. ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கின
4. பர்வதங்கள் அதிர்ந்தன

எல்லாமே அசைந்தன, நடுங்கின, அதிர்ந்தன. ஆனால், 'தேவன் அதின் நடுவில் இருக்கிறார்' என்று வேதம் சொல்கிறது! நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் அசைந்தாலும், நாம் அசைய மாட்டோம். எல்லாவித அசைவு, நடுக்கம், அதிர்வு போன்றவைகளின் மத்தியில்

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!



கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 5.00 மணிக்கு


தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

REACHING NATIONS

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...






### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

**CHIEF EDITOR**
Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

**MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**
Bro. N. Prakasam, M.A., General Manager

**EDITORIAL BOARD**
Sis. Jesy Veena Sam
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Dr. A. Richard Samuel, M.A., Ph.D.
Rev. Dr. K.R. Rajasekaran

**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858

**CORE LEADERS**
Bro. K. Puratchivendan
Dr. Rabinder Boaz, M.S.
Bro. A. Edward Durai
Bro. A. Alvin
Bro. K. Abraham
Sis. Dhanalakshmi Chinnaiah

**E.mail ID**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**
Echo of His Call

"... கர்த்தரை நம்பியிருக்கிறவனையே கிருபை சூழ்ந்து கொள்ளும்"
– சங்கீதம் 32:10

அன்பான சகோதர, சகோதரிகளே!

நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள்.

நமது ஊழியங்களின் எல்லா பகுதிகளிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எங்களுக்கு நல்லவராகவே இருக்கிறார். இம்மாதத்தில் எல்லா கல்வி நிறுவனங்களுக்கும் விடுமுறை காலமாக இருக்கிறது. எனவே, இந்நாட்களில் சுவிசேஷ ஊழியம் செய்து தேவனது ராஜ்யத்தை விரிவடையச் செய்ய உங்கள் சொந்த சபையோடு கைகோர்த்து செயல்படுங்கள்.

இவ்வுலகத்தைப் பார்க்கும்போது, வாலிப சகோதர, சகோதரிகள் ஆலய ஆராதனைகளில் பங்கு பெறாமல், ஊழியத்தின் காரியங்களிலும் ஈடுபடாமல், தேவனை விட்டு விலகிப் போவதை அறிந்து கொள்ளலாம். இது உலகமெங்கும் நடைபெற்று வருகிறது. பெற்றோர்களாலோ, சபை நிர்வாகிகளாலோ ஒன்றும் செய்ய இயலவில்லை.

எனவே, உலக மக்களும், அரசியல்வாதிகளும், தேவ ஊழியர்கள் என்றப் போர்வையில் தவறான உபதேசங்களைப் பிரசங்கிக்கிறவர்களும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, வாலிபர்களைத் தங்கள் வசம் இழுத்துக் கொண்டும், இவ்வுலகத்தின் தவறான வழிகளில் அவர்களை நடத்துகின்றார்கள். சபைகளில், வாலிப ஆண்கள், பெண்கள் ஆகியோரின் வருகைக் குறைந்து கொண்டே வருகிறது. இது மிகவும் வேதனை அளிக்கிறது. குடும்பங்களிலுள்ள மூத்த மக்கள் அவர்களை தெய்வீக நிழலின் பாதுகாப்பில் வைத்துக் கொள்ள முயன்றாலும், தேவனது வழிகளை அவர்கள் அலட்சியம் செய்து, தாங்கள் விரும்பியது எதுவோ, அதையே செய்ய முற்படுகிறார்கள்.

ஆகையால் கிறிஸ்தவ பெற்றோர்களும், தலைவர்களும் இவர்களுக்காக அதிகமாய் ஜெபிக்க வேண்டிய கட்டாயத்திற்குள் இருக்கிறார்கள். உலகமெங்கிலும் உள்ள பிள்ளைகள் மற்றும் வாலிபர்களின் மத்தியில் ஒரு எழுப்புதல் வரவேண்டும் என்று நாம் தேவனிடத்தில் ஊக்கமாய் ஜெபிக்க வேண்டும். இதே பாரத்தை உடைய சில தேவ மக்களை ஒரு குழுவாகச் சேர்த்து, வாலிபர்களுக்காகவும், சிறுவர்களுக்காகவும் ஜெபிக்க ஆரம்பித்துள்ளோம். நீங்களும், பிள்ளைகள் மற்றும் வாலிபர்களின் பெயர்களை எங்களுக்கு அனுப்புங்கள். அந்தப் பெயர்களை தேவனது கிருபாசனத்தின் முன்பு நாங்கள் கொண்டு செல்லுவோம். இவ்வாறு நீங்கள் எங்களுக்கு உதவலாம். எங்களோடு இணைந்து, ஒருமனதுடன் இந்த வாலிபர் மற்றும் சிறுவர் பராமரிப்பிற்கான உலகளாவிய தரிசனத்திற்கு **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசனம்** (Global Vision for Youth & Kid Care) என்ற பெயரை வைத்துள்ளோம். இதற்காக ஜெபியுங்கள். இதைப் பற்றிய உங்கள் கருத்துக்களை வரவேற்கிறோம்.

இதன் ஆரம்பமாக, எல்லா நாடுகளிலும் உள்ள பிள்ளைகள் மற்றும் வாலிபர்களுக்காக ஒவ்வொரு நாளும் இரவு 10 மணிக்கு ஜெபிக்கத் தீர்மானித்துள்ளோம். நீங்களும் எந்த தேசத்தில் இருந்தாலும், உங்கள் தேச நேரத்தின்படி இரவு 10 மணிக்கு நீங்கள் ஜெபிக்கலாம். மேலும், நீங்கள் யாருக்காவது குறிப்பாக ஜெபம் பண்ண வேண்டும் என்று விரும்பினால் அவர்களுடையப் பெயர்களையும், வயதையும் எங்களுக்கு அனுப்பினால் உதவியாக இருக்கும்.

தேவ மக்கள் ஒரு மனதோடு ஒரே காரியத்திற்காக இணைந்து ஜெபித்தால், தேவன் பதில் அளிப்பார் என்று நாம் அறிவோம். நாம் ஜெபித்ததினால் மனம் மாறிய பிள்ளைகள், வாலிபர்கள் இருப்பார்களானால், அவர்களைப் பற்றின நல்ல சாட்சிகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தகுதியான சாட்சிகளை நமது பத்திரிகையில் பிரசுரிக்க விரும்புகிறோம்.

உங்களுக்காக நாங்கள் ஜெபித்து வருகிறோம். எந்த வழியிலாவது மகிமையான சுவிசேஷத்தை உலகெங்குமுள்ள நாடுகளில் அறிவிக்க முழு இருதயத்தோடு முயற்சி செய்து வருகிறோம். எங்களோடு இந்த ஜெப ஊழியத்தில் கைகோர்த்து செயல்படுங்கள் என்று வேண்டிக் கொள்கிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**

(+91) 98412 71858 / 98410 71858, மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ¤ BIBLECOR - Postal Courses (3 languages) ¤ Media Ministry ¤ Online Courses ¤ Theological Correspondence Courses (2 languages) ¤ Church Planting ¤ Nehemiah Bible Colleges ¤ Gospel Printing Press ¤ Great Commission Partners ¤ St. Paul's Matriculation School ¤ Crusades ¤ Community Development

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

தேவன் இருக்கிறார். அதிகாலையில் தேவன் நமக்கு உதவி செய்வார். ஏனென்றால் கர்த்தர் நல்லவர்! அவர் செய்கிற அனைத்தும் நல்லது! செய்ய முடியாதவைகளைச் செய்யும் தேவன்தான் நம் தேவன்.

நீங்கள் போராடிக் கொண்டிருக்கும் காரியங்கள், யுத்தம் செய்து கொண்டிருக்கும் விஷயங்கள், பதில் கிடைக்காத ஜெபங்கள், உங்களை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கும் பழக்கங்கள், உங்களைச் சரியாகச் செயல்படவிடாத தடைகள் எல்லாம் இயேசுவின் நாமத்தில் உடைந்து விடும். ஏனென்றால், **தேவன் அதிகாலையிலே சகாயம் பண்ணுபவர்** (சங்கீதம் 46:5).

## 1. அதிகாலை வேளையின் முக்கியத்துவம் என்ன?

### [அ] அதிகாலை என்பது ஒரு புதிய காலத்தின் துவக்கம்!

யூத நாள்காட்டியின்படி, இரவு 9 முதல் 10 வரை இருள் மூடிக் கொண்டிருக்கும். அதன் பின்பு விடியற்காலை ஆரம்பமாகும். கிட்டத்தட்ட இரவு 12 முதல் அதிகாலை 3 மணிக்குள்ளாக, இரவு விடியலால் தகர்க்கப்பட்டு, வெளிச்சத்தைக் கொண்டு வரும். ஒரு புதிய நாளை துவங்கி, ஒரு புதிய காலம் பிறக்கும். ஆகவேதான், நாம் புயல்காலம், நடுக்கங்கள் மற்றும் குழப்பத்தின் காலங்களினூடே கடந்து வர வேண்டியுள்ளது.

### [ஆ] அதிகாலை என்பது ஒரு மாற்றத்தின் காலம்!

இரவுக்கும், பகலுக்கும் இடையே உள்ள மாற்று காலத்தைத்தான் அதிகாலை வேளை குறிப்பிடுகிறது. ஒரு காலத்திலிருந்து மற்றொரு காலத்திற்கும், ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கும் மாறுவதைத்தான் அதிகாலை குறிக்கிறது. மாற்றம், **நிச்சயத் தன்மை** இல்லாததுதான் அடுத்த அடிக்குள் கடந்து போகலாமா வேண்டாமா என்று தயங்க வேண்டியிருக்கும். இந்த வழியில் போவதா அல்லது வேறு வழியில் போவதா? என்று எண்ணத் தோன்றும். குழப்பமும், கலக்கமும் நிறைந்த நேரம் அது. ஒரு தீர்மானத்தை எடுக்க போராடும் நேரம் அது. பயத்தின காலமாகவும் அது இருக்கும் – இப்பொழுது நடப்பதைக் குறித்த பயமும், இனிமேல் நடக்கப் போவதைக் குறித்த பயமும் இருக்கும். இந்த மாற்றத்தின் காலகட்டத்தை இவ்வாறுதான் இந்த உலகமும், பிசாசும் உங்களைப் பார்க்க வைக்கும். இந்த மாற்றம் ஒர குழப்பத்தின் காலமாக, கலக்கம், பயம், நிச்சயமற்ற காலமாக இருப்பதாக உங்களைச் சிந்திக்க வைக்கும். ஆனால், தேவனோ இதை ஒரு இடைவேளையாகவே பார்க்கச் சொல்கிறார். **திருப்புமுனை** என்ற வார்த்தையை சிந்தியுங்கள். இதில் ஒரு பிரமிப்பு இருக்கிறது. இக்காலம் ஒரு **திருப்புமுனையின் காலம்** என்றே தேவன் இதைக் காண்கிறார். அதிகாலையில் இருளைத் துளைத்துக் கொண்டு வெளிச்சம் தோன்றுவதுபோல, நீங்கள் தடைகளை உடைத்தெறிந்து வெளியே இக்காலத்தில் வருவீர்கள்.

இதைத்தான் அடுத்த படிக்கு (உயர்வுக்கு) உயர்வது என்று கூறுகிறோம். இந்த அதிகாலை நேரத்தில், சபையாய், குடும்பமாய் அல்லது தனிப்பட்ட நபராய் வளர்ச்சியின் புதிய காலகட்டத்திற்குள் நாம் போகிறோம். இது ஒரு பிரமிக்கத்தக்க நேரம். இருளின் வழியாய் ஊடுருவி புதிய வெளிச்சத்திற்குள்ளாய் நம் வாழ்வில் கடந்து செல்லும் நேரம்தான் 'அதிகாலை வேளை'.

### [இ] அதிகாலை என்பது ஒரு ஆவிக்குரிய போராட்டத்தின் காலம்!

இருளை ஊடுருவிச் செல்லுதல் அவ்வளவு எளிதல்ல. ஏதோ ஒன்றை உடைத்து, அதன் வழியாய்த் துளைத்துக்கொண்டு வெளியே வரவேண்டும். அது ஒரு யுத்தம் – ஒரு மிகப் பெரிய போராட்டம்! அவ்வாறு செய்யும்போது இருளை உடைக்கிறீர்கள். எந்த முயற்சியும்

## சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசனம்!
## (Global Vision for Youth & Kid Care)

*உலக நாடுகள் அனைத்திலுமுள்ள இளைய சந்ததியின் நலனைக் குறித்தும், சிறு பிள்ளைகள், வாலிபர்கள் ஆகிய இந்த சந்ததியினரைக் குறித்தும், அவர்கள் மேல் விசேஷமான கவனம் செலுத்த வேண்டுமென்றும், ஒரு விசேஷித்த பாரத்தை எங்கள்மேல் தேவன் வைத்துள்ளார். அவர்களுக்கு வசனங்களைக் கற்றுக் கொடுத்து, தேவ ராஜ்யத்திற்கு அவர்களைத் தகுதியாக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.*

*உலகமெங்கிலும் உள்ள சில தேவ பிள்ளைகளை வைத்து ஒரு குழுவை அமைத்துள்ளோம். இளைஞர்கள், சிறு பிள்ளைகளைக் குறித்த ஒரே விதமான பாரம் உள்ள இந்தக் குழுவினர் ஒவ்வொரு நாளும் இரவு 10 மணிக்கு (அவரவர் தேச நேரப்படி) ஒரு மனதுடன் ஜெபிக்கத்தொடங்கியுள்ளோம். நீங்களும் எங்களுடன் ஜெபிக்க உங்களை வரவேற்கிறோம். உங்கள் விருப்பத்தை எங்களுக்குத் தெரிவியுங்கள்.*



*மேலும், உங்கள் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளின் ஆவிக்குரிய நலனைக் குறித்து பாரம் இருந்தால், அவர்களது பெயர், வயது மற்றும் தேவைகளுக்கான ஜெபக்குறிப்புகள் ஆகியவைகளை எங்களுக்கு அனுப்பலாம். நீங்கள் 35 வயதுக்குள் இருப்பீர்களானால் உங்கள் பெயர்களை நீங்களே பதிவு செய்து கொள்ளலாம். இதற்காக எந்த பணமும் அனுப்ப வேண்டாம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!*

**விவரங்களுக்கான முகவரி:**
*சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசனம்*
**அழைப்பின் எதிரொலி**
வாட்ஸ்அப் : +91 98412 71858 & +91 98410 71858
மின் அஞ்சல் : sam@echoofhiscall.org

இல்லாமல் வெளிச்சத்தைக் கொண்டு வரமுடியாது. ஆனால் தேவன் அத்தகைய ஊடுருவலைச் செய்ய நம்மை அழைக்கிறார். நமது பிள்ளைகளுக்காக, குடும்பத்திற்காக, நமது சபைக்காக, நமது நகரத்திற்காக, நமது தேசத்திற்காக, நமது உலகத்திற்காக அத்தகைய **மாற்றத்தைக்** கொண்டு வர தேவன் நம்மை ஏற்படுத்தியிருக்கிறார்! ஆமென்!! தடைகளைத் தகர்த்தெறிந்து முன்னேறிச் செல்லும் ஆவிக்குரிய போராட்டத்தின் காலம் இது.

நாம் காணும் இருள் அல்லது நடக்கக்கூடாத காரியங்கள், நம் வாழ்க்கையின் முடிவு அல்ல. ஒரு மகா பெரிய வெற்றிக்கு நேராய் நாம் ஊடுருவிச் செல்லும் வழியாய் அது இருக்கிறது. சரீரத்திலும், சிந்தையிலும், ஆவியிலும், உணர்வுகளிலும் எலியா சோர்ந்து அமர்ந்திருந்தான். தன்னால் இனி வாழவே முடியாது என்று அவன் நினைத்திருந்தான். அவன் வாழ்வின் மிகவும் இருளான சூழ்நிலைகளில் ஒன்றாக அந்நேரம் இருந்தது. பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு முன் தனி மனித சேனையாக நின்று போராடி, ஒரு பெரிய எழுப்புதல் ஊழியத்தைச் செய்த எலியாவுக்கு, அவன் காதில் கேட்ட ஒரே சத்தம், "நீ கொல்லப்படுவாய்" என்பதுதான். தன் வாழ்க்கையைக் குறித்து மிகவும் பயந்ததினால், அவனால் சரியாகச் சிந்திக்க முடியவில்லை. ... **போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்; நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல...** 1இராஜா 19:4 என்று கூறினான்.

எல்லாம் முடிந்து விட்டது என்றும் காரிருள் அவனைச் சூழ்ந்திருப்பதாகவும் எலியா உணர்ந்தான். ஆனால் அவன் வாழ்க்கை ஒரு மாற்றத்தை நோக்கி பயணிக்கிறது என்று அவன் அறியவில்லை. **பயணத்தின் நடுவில்** அவன் இருந்தான். இருளை மட்டுமே அவன் கண்டான். இருளின் முடிவில் அதிகாலை வெளிச்சம் உதயமாவதை அவன் காண முடியவில்லை. அந்த இருளைத் தகர்த்தெறிய தேவன் அவனை அந்த இடத்தில் வைத்தார். இவ்வருடத்தில் நம்மில் சிலரை தேவன் அத்தகைய மாற்றத்தின் பயணத்தில் வைத்துள்ளார். நாம் அந்த இருளை உடைத்து வெளிச்சத்தைக் கொண்டு வரும்படியாகத்தான் நாம் அந்தக் காலக் கட்டத்தில் வைக்கப்பட்டிருக்கிறோம்.

**தடைகளை நீக்கிப் போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார் ...** மீகா 2:13. ஆமென்! இருளைத் தகர்த்தெறியும்படி கர்த்தர் நமக்கு முன்பாக நடந்து போவார். நாம் வெளிச்சத்திற்குள் பிரவேசிக்கும்படி அவர் நம்மை நடத்துவார். ... **அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்தும் கடந்து போவார்கள்...** மீகா2:13.

உங்களைத் தடுத்து நிறுத்தி, இருளுக்குள் உங்களை வைத்து, உங்களை நொறுக்கி, உங்களைச் செயலிழக்க வைத்த எதுவானாலும், அதை விட்டு நீங்கள் வெளியே வர தேவன் உதவி செய்கிறார். இயேசுவின் நாமத்தில் நீங்கள் வெளியே வருவீர்கள். ஏனென்றால் கர்த்தர் உங்கள் முன் நடந்து போகிறார். **வாசல்களே உங்கள் தலைகளை உயர்த்துங்கள் . . . மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார். யார் இந்த மகிமையின் ராஜா?** சங்கீதம் 24:7–8.

ஒரு பாடல் இவ்வாறாக வருகிறது:

***"எனக்கு முன் செல்பவரை அறிவேன்***
***எனக்குப் பின் வருபவரை அறிவேன்***
***தூத சேனையின் தேவன் என் பக்கம்***
***எனக்கு எதிராய் உருவாகும்***
***எதுவும் வாய்க்காது..."***

**நான் பயப்பட மாட்டேன், கர்த்தர் என்னோடே இருக்கிறார்.**

ஏற்கனவே கூறியதுபோல 'ஊடுருவிப் பாய்தல்' என்பது இருள் வழியாகப் பாய்ந்து வெளிச்சத்திற்கு வருதல் ஆகும். இருளிலிருந்து ஒரு விடுதலையை தேவன் இவ்வாண்டில் நமக்குத் தருவார். ஜெயத்துடனே நாம் வெளிச்சத்திற்குள்ளாய்ப் பிரவேசிப்போம்.

## 2. எதிலிருந்து இந்த விடுதலை வரப்போகிறது?

இருள் – இருள் எதைக் குறிக்கிறது?

### [அ] தீமையின் ஆதிக்கம்!

துஷ்டத்தனமான எதுவும் இருள் தான். இருளின் அதிபதியாகிய பிசாசை துஷ்டத்தனம் குறிக்கும். இருள் ஒரு வகை ஆதிக்கம். **இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தின வருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்** கொலோசெயர் 1:13. ஆதிக்கம் என்றால் அதிகாரம் செலுத்துதல். நம்முடைய வாழ்க்கையில் ஏதோ ஒரு சக்தி நம்மைக் கட்டுப்படுத்தி, அதன் கட்டளைக்கு நம்மை கீழ்ப்படிய வைப்பது போல் உணரலாம். அதிகாலை வேளை என்பது இருளின் அதிகாரத்தை உடைத்தெறிய வைக்கிறது.

எந்த பாவத்தையும் இருள் குறிக்கும். அந்த பாவம் நம்மேல் அதிகாரம் செலுத்தி, நம்மை அழுத்தி நம்மை அதின் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும். ஒருவேளை ஏதோ ஒரு பழக்கம் உங்களை ஆட்கொண்டிருக்கலாம். அதிலிருந்து வெளியே வர நீங்கள் போராடிக் கொண்டிருக்கலாம். ஆவிக்குரிய முதிர்ந்த கிறிஸ்தவர்கள்கூட பாவத்தின் பிடியில் சிக்கிக்கொண்டு போராடுகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? தொழில் நுட்பம்

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


# நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

*வேளச்சேரி – முழுநேரம் – இந்தி*
*சேப்பாக்கம் – மாலை நேரம் – தமிழ்*
(திங்கள், செவ்வாய், வியாழன்)

*Registered Candidate for Membership*
Asia Theological Association (ATA)

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.**

**Certificate in Theology : ஒரு வருடம்**
**Diploma in Theology : இரண்டு வருடங்கள்**

**கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**

**உடனே அணுகவும்!**

**தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,**
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
**மின்னஞ்சல்** : sam@echoofhiscall.org /**இணையதளம்** : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

GREAT COMMISSION PARTNERS ECHO OF HIS CALL MINISTRIES SINCE 1969

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2023 மே 19 முதல் ஜூன் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

மே 19 ⇨ நமது அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு எல்லா மிஷன் பணித்தளங்களுக்கும் அனுப்பப்படும் சுவிசேஷப் பிரசுரங்களை தேவன் ஆசீர்வதித்து வருவதற்காக...

மே 20 ⇨ நமது ஊழியப் பிரயாணங்களை தேவன் ஆசீர்வதித்து வருவதற்காக...

மே 21 ⇨ நமது தலைமைச் சபை மற்றும் கிளைச் சபை உறுப்பினர்களை ஆசீர்வதித்து வருவதற்காக...

மே 22 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய வல்லமைகளிலிருந்தும் பாதுகாப்பு அளித்து வருகிற கிருபைக்காக...

மே 23 ⇨ நமது **அஞ்சல்வழி வேதாகமக்கல்வி** மற்றும் **இறையியல் கல்வி** ஆகியவற்றை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக...

மே 24 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு** புதிய முதல்வரை கொடுத்ததற்காக...

மே 25 ⇨ தலைமை மற்றும் கிளைச் சபைகளில் நடைபெறும் ஞாயிறு ஆராதனைகளை ஆசீர்வதித்து வருவதற்காக...

மே 26 ⇨ நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி**க்கு புதிய வேத ஆசிரியரைக் கொடுத்த கிருபைக்காக...

மே 27 ⇨ அனைத்து நாடுகளின் மத்தியிலும் நிலவிவரும் போர் பீதி மற்றும் குழப்பங்கள் மத்தியில் தேவ பாதுகாப்பு கொடுத்து வரும் கிருபைக்காக...

மே 28 ⇨ நமது பணியாளர்கள் அனைவரது குடும்பத்தினர் மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் பொழியப்பட்டு வருவதற்காக...

மே 29 ⇨ அரசியல் மற்றும் மத எதிர்ப்புகள் மத்தியிலும் நமது கிறிஸ்தவ ஊழியங்களை வெற்றிகரமாக நடத்தி வரும் கிருபைக்காக ...

மே 30 ⇨ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக...

மே 31 ⇨ சமூகத்தின் அனைத்து துறைகளிலும் பெண்களை உயர்த்திய கிருபைக்காக...

ஜூன் 01 ⇨ நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக்கல்லூரிகளில்** புதிய மாணவர்களைக் கொடுத்த கிருபைக்காக ...

ஜூன் 02 ⇨ நமது சுவிசேஷ அச்சகத்தின் தொடர்பணிகளுக்காகவும், அதற்கு உறுதுணையாக உள்ள திறமைவாய்ந்த பணியாளர்களுக்காகவும் ...

ஜூன் 03 ⇨ **யூடியூப் 5 நிமிட செய்திகள் மற்றும் ஜெபம்** மூலம் அதிகரித்து வரும் Subscribers மற்றும் சாட்சிகளுக்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஜூன் 04 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவர் மீதும், அவர்களது குடும்பத்தினர் மீதும் கர்த்தரின் கருணை பொழியப்படவேண்டி...

ஜூன் 05 ⇨ நமது ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் ஆரோக்கியம் மேம்பட வேண்டி ...

ஜூன் 06 ⇨ சகலவிதமான நிலைகளிலும் மற்றும் திட்டமிடுதலிலும் அனைத்து நாடுகளும் ஒற்றுமையுடனும், முன்னேற்றத்துடனும் காணப்பட ...

ஜூன் 07 ⇨ கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் ஆசீர்வாதங்களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பிற்காகவும் ...

ஜூன் 08 ⇨ சுவிசேஷம் சென்றடையாத பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றிட வேண்டி...

ஜூன் 09 ⇨ ஆண்டவரது இராஜ்யம் பூமியில் நிலைப்பட மேலும் கூடுதலான தரிசனங்களை நம்மிடத்தில் அருளவேண்டி ...

ஜூன் 10 ⇨ வைரஸ் காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களுக்கு எதிராக பாதுகாப்பை வேண்டி ...

ஜூன் 11 ⇨ உலகத்திலுள்ள அனைத்து இளம் தலைமுறையினரும், குழந்தைகளும் கர்த்தரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டி...

ஜூன் 12 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் உடல்நலம், தேவ பாதுகாப்பை வேண்டி ...

ஜூன் 13 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** எல்லாவிதமான வழிகள் மற்றும் செயல்பாடுகளின் விஸ்தீரணத்திற்காக ...

ஜூன் 14 ⇨ 2023–24ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக...

ஜூன் 15 ⇨ உலகத்தில் உள்ள ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள் மற்றும் அரசு அதிகாரிகளுக்காக...

ஜூன் 16 ⇨ 2023–24ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...

ஜூன் 17 ⇨ நமது ஜெப ஊழியத்தில் உதவி செய்பவர்களுக்காகவும், நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகள் அனைவருக்காகவும் ...

ஜூன் 18 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்களுக்காகவும், அவர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்காகவும் ...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

முன்னேறி வருவதால், ஒவ்வொருவரும் தங்கள் உள்ளங்கைகளிலுள்ள வலைதளத்தைப் பயன்படுத்தலாம். ஆனால், நடப்பதென்ன? நம்மால் கற்பனைகூட செய்ய முடியாத பாவங்களின் கதவுகளை அது திறந்து விட்டது. எல்லா வயதினரும் சமூக வலைதளத்தில் மூழ்கி, 'டிக் டாக்' போன்ற செயலியில் அதிக நேரம் செலவழித்து, 'யூ டியூப்' சேனல்களைக் கண்டு களித்து, ஆபாசப் படங்களையும் ரசித்துப் பார்த்து ஒருவித போதைக்குள்ளாகுகிறார்கள். இந்த வலைதள உபகரணங்களை உபயோகிக்கும் சிறு பிள்ளைகளும்கூட இந்த ஆபாச படங்களின் போதைக்குள் விழுந்து கிடக்கிறார்கள்.

இருளின் அதிபதியாகிய பிசாசானவன் நமது நேரம், நமது சிந்தை, உணர்வுகள் ஆகியவைகளை அவனது முழு கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொண்டு விட்டான். நமது சமாதானம், குடும்ப உறவுகள், தேவனோடு நமக்கு இருக்கும் உறவு ஆகியவற்றை அவன் கெடுத்துவிட்டதை நாம் அறியாமல் இருக்கிறோம். மேலும் இந்த பழக்கம், நமது இருதயத்தையும், சிந்தையையும், ஆத்துமாவையும் கெடுத்து விட்டதையும் சிலர் அறியாமல் இருக்கிறார்கள். இந்த வலைதளத்தின் மோகம், நமது அடுத்த சந்ததியரை தாக்கத்திற்குள்ளாக்கியுள்ளது மிக முக்கியமானது. நாம் செய்யும் ஒவ்வொரு கிரியையும் நமது பிள்ளைகளின்மேல் ஒரு தாக்கத்தை உண்டாக்கும்.

நமது வாழ்க்கையில், குடும்பங்களில், சபைகளில், நமது ஊழியப் பாதையில், தேவனோடு நாம் நடக்கும் வழிகளில் பிசாசு ஆதிக்கம் செலுத்தியிருப்பானானால், ஒரு **பெரிய விடுதலையை** தேவன் நமக்கு அளிப்பாராக.

### [ஆ] அறியாமை!

**அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதயக் கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து;** எபேசியர் 4:18.

'அறியாமை' என்பது தேவ ராஜ்யம் சென்றடைய தடையாயிருக்கிறது. சிந்தையிலே நாம் அறியாமையுடையவர்களாய் இருக்க வேண்டும் என்று பிசாசு விரும்புகிறான். அவன் நம்மை வஞ்சிக்கிறவன். நமது அறியாமையை அவன் பயன்படுத்தி அவன் வளர்கிறான். எனக்குத் தெரியாது என்று எப்போதும் சொல்லாதிருங்கள். **தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்** என்று 2 கொரிந்தியர் 4:4இல் வாசிக்கிறோம்.

### [இ] மனது குருடாகுதல்!

சில நேரங்களில் நாம் வேதத்தை வாசிக்கிறோம். ஆனால், அது புரிவதில்லை. நல்ல கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும் சிலருக்கு ஆழமான அனுபவங்களை தேவனோடு வைத்துக் கொள்ள முடிவதில்லை. ஏன் இன்னும் இருள் காணப்படுகிறது? கர்த்தருடைய வார்த்தையை வாசியுங்கள். உங்கள் அறியாமையிலிருந்து விடுதலை பெற தேவனிடம் ஜெபியுங்கள். தேவனிடத்தில் ஞானத்தைக் கேளுங்கள். **யாவருக்கும் அதை அவர் சம்பூரணமாய் கொடுக்க வல்லவர்** (யாக்கோபு 1:5). இன்று தொழில்நுட்பம் வேத புத்தகத்தை, எல்லா பதிப்புகளிலும், எல்லா மொழிகளிலும், பலவித எழுத்து வடிவிலும், எல்லா நேரங்களிலும் பயன்படுத்தும் வண்ணம் நம் கைகளில் கொடுத்துள்ளது. இதைக் குறித்து எனக்கு சந்தோஷம்தான். இருப்பினும், நாம் அதிகமாக நம்மில் சிலர் கைபேசிகளிலுள்ள வேதாகமத்தையே சார்ந்திருக்கிறோம். வேதம் நம் கைகளிலிருந்தாலும், நமது இருதயத்திலோ, நமது சிந்தையிலோ இல்லை.

கடந்த காலங்களில், மக்கள் வேத வசனங்களை வேத புத்தகத்திலேயே தேடி வாசித்தார்கள். இன்று 'கூகுள்'ஐக் கேட்கிறார்கள். ஒருநாள் நிகழ்நிலை வேதாகமம் இல்லாமல் போகும். அன்று நம் நிலை என்னவாகும் என்று கவலைப்படுகிறேன். கர்த்தருடைய வார்த்தையை நமது கைபேசிகளில் எளிதாக வாசிக்க பிசாசு வகை செய்து கொடுத்துள்ளதால், நாம் அதையே அதிகமாய் சார்ந்திருக்கிறோம். ஒரு நாளில் அதை அரசாங்கம் தடை செய்து விடுமானால், நமது கைபேசிகளில் வேத வசனங்களை வாசிக்க முடியாது. கர்த்தருடைய வார்த்தை நம்மிடம் இல்லாமல் போய்விடும். நமது வேத புத்தகத்தை வாஞ்சையோடு வாசிப்போம். வசனங்களை மனப்பாடம் செய்து இரவும் பகலும் அவற்றை தியானிப்போம். அப்பொழுது அவை நம் இருதயங்களில் எழுதப்பட்டுவிடும்.

## 3. திருப்புமுனை எதை நோக்கி?

வெளிச்சம் – வெளிச்சம் என்றால் என்ன?

### [அ] புரிந்து கொள்ளும் அறிவுதான் வெளிச்சம்!

அனைத்தையும் சரியான வெளிச்சத்திற்குள் கொண்டு வருதல். **தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை . . .** 1 யோவான் 1:5 வெளிச்சம் இருக்குமானால் அங்கு ஆற்றல் இருக்கும். தெய்வீக வெளிச்சத்தின் மூலம் நாம் ஆவிக்குரிய ஆற்றலைப் பெறுகிறோம். அது நம் சிந்தைகளை ஒளிபெறச் செய்கிறது; தெளிவாய்ப் பார்க்கச் செய்கிறது; உங்களை விடுதலையாக்கி, அனைத்தையும் சரியான வெளிச்சத்துக்

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....


**செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**

மேடவாக்கம், சென்னை

**அழைப்பின் எதிரொலி ஊழியத்தின் பிரிவு**

**கிறிஸ்தவ ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் கீழ்காணும் பணியிடங்களுக்குத் தேவைப்படுகின்றனர்:**

- உடற்கல்வி
- கணிதம்
- இயற்பியல்
- வேதியியல்
- செக்யூரிட்டி &
- துப்புரவுப் பணியாளர்
- மழலையர் பள்ளி
- இந்தி
- ஆங்கிலம்
- இடைநிலை

கைபேசி & வாட்ஸ்அப் எண். 98410 71858

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
3. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்) தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒரியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகன்.
4. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (இரு இடங்களில்) மாலை நேரம் / முழு நேரம்
5. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை – ஞாயிறு காலை 8.30 மணி மாலை 4.00 மணி
13. தமிழ் ஆராதனைகள் – ஞாயிறு காலை 8.00 மணி & 10.00 மணி
14. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
15. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
16. தமிழ் – ஆங்கிலம் ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
17. போதகர் ஆலோசனைக் கூட்டம் – ஞாயிறு மாலை 4.00 மணி
18. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
19. இறையியல் கல்வி – புதன் மாலை 6.30 மணி
20. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
21. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
22. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
23. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
24. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 5.30 மணி
25. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4. 00 மணி
26. இரவு ஜெபம் – 2–ம் வெள்ளி இரவு 9.30 மணி
27. உபவாச ஜெபம் – மூன்றாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
28. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
29. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி
30. ஊழியர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
31. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

# அழைப்பின் எதிரொலி
## தபால் வழிக் கல்வி
### இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.




“புதுவாழ்வு – உமக்கு” என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி, சென்னை
# தேவை

1. **கல்லூரி முதல்வர்**
   நெகேமியா வேதாகமக் கல்லூரி,
   தகுதி: M. Div. அல்லது M.Th.
2. **கம்ப்யூட்டர் பணியாளர்கள்**
   தகுதி : பட்டப்படிப்புடன் கம்ப்யூட்டர் தட்டச்சு

தொடர்புக்கு:
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org
வாட்ஸ்அப் எண் : +91-98412 71858

## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக “அழைப்பின் எதிரொலி” அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) “Echo of His Call Educational Trust” என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## தேவனுடைய இரக்கம்!

அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து,
எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்;
அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள
சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார் ...
- 1 சாமுவேல் 2:8

ஓர் இனிய காலைப்பொழுது! ஞாயிறு காலையில் அழகான உடைகளை உடுத்தி, என் தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, பிள்ளைகள் யாவரும் மிகவும் குதூகலத்துடன் நெல்லறைக்கோணம் என்ற குக்கிராம தென்னிந்திய திருச்சபைக்கு வந்து கொண்டிருந்தனர். சுமார் 12 வயதையுடைய நான் எல்லாரையும் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்கள் எல்லாரிடத்திலும் ஒவ்வொருவிதமான புகழ்ச்சிக்குரிய தகுதிகள் இருந்தன. ஆனால் என் தகுதியின்மைகளை உணர்ந்த நிலையில், நானும் ஆண்டவர் இயேசுவை ஆராதித்துக் கொண்டிருந்தேன். என் உள்ளத்தில் “தம்முடைய எல்லாத் தகுதிகளையும் 'வேண்டாம்' என்று தள்ளிவிட்டு இந்த உலகத்திற்கு வந்து இவ்வளவு பெரிய மறுவாழ்வை இவ்வுலக மக்களுக்கு அறிமுகம் செய்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை பயன்படுத்தி, நான் ஏன் என் போதகரைப் போன்ற ஒரு தேவ ஊழியனாக மாறக் கூடாது?” என்றப் பெரிய கேள்வியும், தாக்கமும் எழுந்தன. அன்று அந்தத் திருச்சபையில் வைத்து ஆண்டவர் இயேசு கிறிஸ்து என்னுடன் பிரத்தியட்சமாகப் பேசினார்.

அன்று சபையில் என் போதகர் பிரசங்கம் பண்ணும்போது, பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாமுவேல் தீர்க்கதரிசியைக் குறித்து 1 சாமுவேல் 3–ம் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பிரசங்கித்தார்கள்.

1 சாமுவேல் 3–ம் அதிகாரத்தில் முதல் மற்றும் 4–ம் வசனங்களில் கர்த்தருடைய வசனம் அபூர்வமாகவும், தேவதரிசனம் இல்லாதிருந்த காலத்தில் சாமுவேல் தேவனுடைய ஆலயத்தில் தேவ ஊழியர் ஏலிக்கு முன்பாகக் கர்த்தருக்குப் பணிவிடை செய்துவிட்டுப் படுத்துக் கொண்டார். அப்பொழுது கர்த்தர் சாமுவேலைக் கூப்பிட்டார். சாமுவேலை ஓர் தீர்க்கதரிசியாகவும், தேசத்தின் நியாயாதிபதியாகவும் உயர்த்தினார் என்று ஓர் ஆழமான சத்தியம் பிரசங்கிக்கப்பட்டது.

நான் அந்த வார்த்தைகளை என் வாழ்க்கையின் அச்சாணியாக முக்கியத்துவப்படுத்தி செயல்பட ஆரம்பித்தேன்.

1. தேவன் என்னை வைத்திருந்த என் சபையையும், தேவாலயத்தையும் ஊக்கமாக நேசித்து ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் அங்கு சென்று, அதனை சுத்தப்படுத்துவதிலும், நாற்காலிகளையும், இதர இருக்கைகளையும் துடைத்து சுத்தப்படுத்துவதிலும் ஈடுபட்டேன். தேவாலயத்தின் சுற்றுப்புறங்களை சுத்தப்படுத்தும் பணிகளில் அதிக ஆர்வம் கொண்டேன். அன்றைய இசைக்கருவிகளான டிரம், கைத்தாளங்கள், ஆர்மோனியம் போன்றவற்றை அதினதின் இடத்தில் ஒழுங்காக வைக்கவும் ஆரம்பித்தேன். பிற்காலத்தில் 'நற்செய்தி ஜெபக்குழு' என்ற ஓர் துணைஊழியக் குழுவையும் ஏற்படுத்தி என் தேவாலயத்தை பாதுகாக்கவும், ஊழியங்களை வளர்க்கவும் ஆரம்பித்தேன்.

2. தேவன் எனக்கு அருளியிருந்தப் போதகர்களுக்கு சரீரப் பிரகாரமான உதவிகளைச் செய்தேன். அவர்களுடைய கைப்பைகளை சுமக்கவும், அவர்களுடைய பாதரட்சைகளை சுத்தம் செய்யவும், என் வீட்டிலிருந்து சிற்றுண்டி, மதிய, இரவு உணவுகளைக் கொண்டு வந்துக் கொடுக்கவும் ஆரம்பித்தேன். இப்படி என் போதகர்களுக்குப் பணிவிடை செய்தேன்.

3. சபையில் கூடிவந்த எல்லா சபை அங்கத்தினர்களுக்கும் ஓர் நல்ல பிள்ளையாகவும், நல்ல தம்பியாகவும், நல்ல அடிப்படைப் பணிவிடைக்காரனாகவும் பிறருடைய பயன்பாட்டுக்கு என்னை ஒப்புக் கொடுத்தேன்.

இவ்வாறு காரியங்கள் நடந்தும், நான் சரீரப் பிரகாரமாக பேச்சுத்திறன் அற்றவனாகவும், ஞாபகசக்தி அற்றவனாகவும், கல்வித் திறனில் பின்தங்கியவனாகவும், மற்றப் பிள்ளைகளுக்கு இருந்த பல நன்மைகள் மற்றும் திறமைகள் என்னிடத்தில் இல்லாதவனாகவும் இருந்தேன் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்போது என் வயதிலிருந்த பிள்ளைகள் உயர்தரக் கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்று, இடைப்பட்ட நேரங்களில் தனியார் டியூஷன்களுக்கும், இதர மொழிகளைக் கற்கும்படியான கல்வி நிலையங்களுக்கும், கராத்தே கற்கவும், உலக அறிவை பெருக்கும் நிலையங்களுக்கும் சென்று திறமைகளை வளர்க்க அனுப்பப்பட்டார்கள். ஆனால் பள்ளிப்படிப்பு நேரம் தவிர, இதர எல்லா நேரங்களிலும் என் தேவாலயப் பணிகளையும், தேவ ஊழியருக்குப் பணிவிடைகளையும் கருத்தாய் செய்ய தேவன் எனக்கு அருள்புரிந்தார்.

தேவனாகிய கர்த்தர், சாமுவேலைப் போல தேவனுடைய சபைக்கும், தேவனுடைய ஊழியங்களுக்கும் அடிமட்டப் பணிவிடைக்காரனாக இருந்த என்னையும் உயர்த்தினார். இவ்வளவு அதிகப்படியான ஊழியப் பொறுப்புகளின் மத்தியிலும் சுமார் 23 ஆண்டுகள் இந்திய அரசுப் பணியில் நான் செயல்படவும் தேவன் என்னை உயர்த்தினார். தங்கு தடையின்றி நான் என் இரண்டு பணிகளையும் சிறப்புடன் செய்ய, யாருக்குமே இதுவரையிலும் அளிக்காத ஓர் சிறப்பு அனுமதியையும் அரசாங்கம் எனக்கு அளித்து ஆதரித்தது ஓர் விந்தையிலும், விந்தை!

தன் தேவாலயத்தை நேசித்து தன்னுடைய தேவ ஊழியருக்குப் பணிவிடை செய்வதைத் தன் பாக்கியமாகக் கருதியதால் சாமுவேலை ஒரே நேரத்தில் ஆவிக்குரிய தீர்க்கதரிசியாகவும், உலக பிரகாரமான அரசாங்க நியாயாதிபதியாகவும் உயர தேவன் உதவி செய்தார்.

நீங்களும் உங்கள் தேவாலயத்தையும், உங்கள் போதகரையும் கனம் பண்ணி வாழ்ந்தால் மிகப் பெரிய உயர்வை எட்டலாம்.

***

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

குள்ளாய்க் கொண்டு வருகிறது. வெளிச்சம் **வெளிப்பாடுகளைக்** கொடுக்கிறது. வேதப் புத்தகம், தேவனுடைய சத்தியமாயிருக்கிறது. தேவ ஒளியாக வேதப் புத்தகம் இருக்கிறது. **உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்; அவைகள் என்னை நடத்தி, உமது பரிசுத்த பர்வதத்திற்கும் உமது வாசஸ்தலங்களுக்கும் என்னைக் கொண்டு போவதாக.** சங்கீதம் 43:3. வெளிச்சம் இல்லை என்றால், சத்தியமுமில்லை, விடியற்கால வெளுப்பும் இல்லை! வெளிச்சம் நமக்கு வேண்டுமானால், தேவ பிரசன்னம் என்ற பர்வதத்திற்குப் போக வேண்டும். இருந்த இடத்திலேயே இருப்போமானால், தேவ பர்வதத்திற்கு போக முடியாது.

## [ஆ] வெளிச்சம் மாற்றத்தைக் கொண்டு வருகிறது!

அதிகாலையில் இருளிலிருந்து வெளிச்சம் தோன்றி ஒரு மாற்றம் வருகிறது. அதே போல் இயேசு கிறிஸ்துவின் மூலம் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. ஒரு திடீர் ஒளி சவுலைப் பவுலாக மாற்றியது. **இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.** 2 கொரிந்தியர் 4:6. ஒளி தேவ மகிமைக்கு இணையானது. ஒளி பிரகாசிக்கும்பொழுது, ஒரு மாற்றத்தை கொண்டு வருகிறது. **நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.** 2 கொரிந்தியர் 3:18. கர்த்தருடைய வார்த்தை எந்த மனிதனையும் மறுரூபப்படுத்தும்.

வெளிச்சம் மாற்றத்தை உருவாக்கும் தன்மையுடையது. சுவிசேஷ நற்செய்தி வெளிச்சத்தைக் கொண்டு வரும். எதற்காக சபையில் பிரசங்கிக்கிறோம்? சபையில் ஒரு மணி நேரம் அமர்ந்து ஏன் பிரசங்கத்தைக் கேட்கிறோம்? ஏதோ ஒரு செய்தியாகப் பிரசங்கத்தைக் கருத முடியாது. அது மூளை அறிவைக் கொடுப்பதல்ல. வசனம் நம்மை மாற்றுகிறது. அதிகாலை விடியல் இயேசு கிறிஸ்து அருளும் ஒளிக்கு சமமானது. நாமும் இருளைக் கடந்து ஒளியாக மாறுவோமாக.

இந்த அதிகாலை வேளையில் தேவன் நம் வாழ்வில் வந்து நமக்கு உதவ வேண்டும் என்று உண்மையாய் ஜெபிக்கிறேன். இந்த மாற்றத்தை நாம் அனுபவிக்க வேண்டும். இருளிலிருந்து வெளிச்சம் வரும் நேரத்தில் ஒரு பெரிய வல்லமை வெளிப்படும். இயேசுவும் அதிகாலை வேளையிலே இருளின் அதிகாரத்தை உடைத்தெறிந்து எழும்பினார். கல்லறையிலிருந்து வெளியே வந்தார். ஒளியாகிய இயேசு அந்த அதிகாலை வேளையைத் தெரிந்தெடுத்தார். அவர் உயிர்த்தெழுந்தார். இது ஒரு வல்லமை நிறைந்த சத்தியம்.

நமது புதிய உடன்படிக்கை இந்த அதிகாலை வேளையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஏனென்றால் 'உயிர்த்தெழுதல்' அதிகாலை வேளையில் சம்பவித்துள்ளது. அதிகாலையில் ஏற்படும் மாற்றத்தைப் போல, நம் வாழ்வின் மாற்றத்தின் நேரத்தில் கிடைக்கும் ஒவ்வொரு வாக்குத்தத்தமும் 'ஆம்' என்றும் 'ஆமென்' என்றும் இருக்கிறது. **கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா.** 1 கொரிந்தியர் 15:14. மாற்றத்தில் வல்லமை இருக்கிறது. இந்த வருடமே ஒரு மாற்றத்தின் ஆண்டு.

இறுதியாக யாக்கோபைக் குறித்து சிந்திப்போம். யாக்கோபு தேவனோடு விடியுமளவும் போராடினான். என்று வேதம் சொல்கிறது. அதன்பின் அந்த அதிகாலை வேளையில் அவன் வாழ்வில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது.

**யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்; அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி, அவனை மேற்கொள்ளாததைக் கண்டு, அவனுடைய தொடைச்சந்தைத் தொட்டார்; அதினால் அவருடனே போராடுகையில் யாக்கோபின் தொடைச்சந்து சுளுக்கிற்று. அவர்: நான் போகட்டும், பொழுது விடிகிறது என்றார் ...** ஆதியாகமம் 32:24–26.

அங்குதான் 'இஸ்ரவேல்' என்ற முழு தேசமும் பிறந்தது. ஆகவேதான் விடியற்காலைப்பொழுது மிக வல்லமையுள்ளது என்று கூறுகிறேன். ஏதோ ஒரு காரியத்திற்காக நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது சோர்ந்து போய் நிறுத்திவிடாதீர்கள். யாக்கோபு போராடியது போல் ஜெபித்துக் கொண்டேயிருங்கள். அதிகாலை விடியும்போது ஒரு மாற்றம் ஏற்படும்.

இரண்டாவதாக, தன் சகோதரனாகிய ஏசாவை நினைத்து யாக்கோபு பயந்தான். அவன் தன்னை எதிர்த்து வருவான் என்று எண்ணி, அவனுக்கு சமாதான காணிக்கைகளை அனுப்பினான். அப்போதாவது ஏசாவின் கோபம் தணியும் என்று கருதினான். ஆனால், நடந்தது என்ன? சகோதரர்களுக்குள்ளே எந்த பிரச்சனைகளும் வராதபடிக்கு அவர்களுக்குள்ளே சமாதானமும், ஒப்புரவும் ஏற்பட தேவன் அருளினார். இருப்பினும், யாக்கோபின் தொடைச்சந்திலே சுளுக்கு ஏற்பட்டது. இந்த சம்பவத்திற்குப் பின் யாக்கோபின் வாழ்க்கைப் பாதையில் ஒரு மாற்றம் வந்தது. கர்த்தர் நம் வாழ்வில் கிரியை செய்யட்டும். அவர் கிரியை செய்தால், நம் வாழ்க்கை பாதை மாறும். நாம் பழைய நிலையிலே இருக்க மாட்டோம். யாக்கோபின் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்புமுனையால் ஒரு புதிய தேசம் உருவாகியது. உங்கள் வாழ்க்கையிலும் நடக்கும் திருப்புமுனையால் ஒரு புதிய காலம் உங்களில் ஆரம்பமாகும்!

ஒரு பெரிய அசைவு வரும் என்று நாம் நம்புகிறேன். அதனால் ஒரு மாற்றம் வரப்போகிறது. இருளின் ஆதிக்கத்தினால் பல வித தடைகள் இருந்திருக்கலாம். ஆனால், புதிய விடியலில், புதியவை ஆரம்பமாகும். ஒரு புதிய அத்தியாயம், மிகப் பெரிய திருப்பங்கள் உண்டாகும். உங்கள் தனிப்பட்ட வாழ்வில், குடும்பத்தில், சபையில், தேசத்தில் ஏதோ ஒரு மிகப் பெரிய தடை உடைக்கப்படப் போகிறது.

ஆனால், நாம் உடைக்கப்பட ஒப்புக் கொடுக்க வேண்டும். உடைக்கப்பட்டால் தான் வெளியே வரமுடியும். தாய்க்கோழி தன் முட்டைகளின்மேல் அமர்ந்து, அடைகாத்து, சரியான நேரத்தில், சரியான வெப்பநிலையை அடைந்ததும் முட்டைகள் உடைந்து கோழிக் குஞ்சுகள் வெளிவருவது போல நம் வாழ்விலும் நடக்கும். உடைக்கத் தெரியாவிட்டால் புது வாழ்வை அடைய முடியாது. அதிகாலையில், வெளிச்சம் உண்டு. ஆனால் அது இருளைக் கிழித்து வர வேண்டும். அவ்வாறு கிழிக்கப்பட்டு ஊடுருவினால்தான், புதிய வழி, புதிய காலம் வெளிப்படும்.

இத்தகைய திருப்புமுனையை தேவன் நம் எல்லாருக்கும் தருவாராக. தேவன் அதிகாலை வேளையில் நமக்கு உதவி செய்வார். நீங்கள் அசைக்கப்படுவதில்லை. தேவன் உங்கள் நடுவில் இருக்கிறார். இந்த ஒரு நம்பிக்கையுடன், முன்னேறிச் செல்வோம்.

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது **அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப்** (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **S. Sam Selva Raj** |
| A/C No. | : **1023 2934 679** |
| IFSC | : **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | |
|---|---|
| Branch | : **Anna Salai, Chennai-6** |
| Name | : **Echo of His Call** |
| A/C No. | : **6038 0502 2319** |
| IFSC | : **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : **1023 2923 805** |
| IFSC | : **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❋ வருட சந்தா ரூ. 100/– ❋ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

Regd. with the RNI under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH/(C)/197/21-23
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS / 1 Patrika Channel"
on 28th APRIL 2023
If un-delivered please return to:
ECHO OF HIS CALL (TAMIL)
P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**